**OS No. 170/2022**

**Dated: 07.07.2025**

**PW 1– திரு.முரளிதரா, த.பெ.சந்தரய்யா**

**1,7 ,12–15 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

மேற்படி எனக்கும் , கவுஸ்பாஷாக்கும் இதற்கு முன்பு எந்தவித Transanction –லும் நடைப்பெறவில்லை. இதற்கு முன்பான நான் கவுஸ்பாஷா உடன் கிரயப் ஒப்பந்த பத்திரம் ஏதேனும் போட்டுள்ளேனா என்று சொன்னால் அவ்வாறு ஏதும் போடவில்லை . ( தற்போது இந்த சொத்து சம்மந்தமாக கவுஸ்பாஷா உடன் எந்த அக்ரிமெண்ட் போடவில்லை என்றும் இன்னொரு சொத்து குறித்து Sale Receipt சம்மந்தமாக வழக்கு இப்பதாக கூறுகிறார் ). அந்த சேல் ரசீதை நான் கவுஸ்பாஷாக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் . இந்த வழக்கு தவிர கவுஸ்பாஷா உடன் சேல் அக்ரிமெண்ட் போட்டது இல்லை , கிரய பத்திரமும் எழுதிக்கொடுக்கவில்லை . இந்த சொத்து தவிர வேறு ஏதேனும் சொத்தை கவுஸ்பாஷா எனக்கு விற்றுக்கொடுத்துள்ளாரா என்று சொன்னால் விற்றுக்கொடுத்துள்ளார் . அவ்வாறு கவுஸ்பாஷா எத்தனை சொத்துக்களை எனக்கு விற்றுக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் எத்தனை சொத்துக்களை விற்றுக்கொடுத்துள்ளார் என்பது எனக்கு ஞாபகமில்லை. எனக்கும் , கவுஸ்பாஷாக்கு இடையே ஏற்கனவே நிறைய கொடுக்கல் வாங்கல் நடந்துள்ளது என்று சொன்னால் அசல் வழக்கு எண் . 450/2023 என்ற வழக்கு சம்மந்தமாக கொடுக்கல் வாங்கல் நடந்துள்ளது .

(2) பவர் ஒன்று எழுதும்போது ரசீது ஒன்றை கவுஸ்பாஷாக்கு எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான் . சொத்தை விற்றுதான் பவர் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த பவர் எழுதிக்கொடுக்கும்போது

ஒரு ரசீது ஒன்றை எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான் . தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அவ்வாறு எழுதிக்கொடுத்த ரசீது என்று சொன்னால் தற்போது காண்பிக்கப்படும் ரசீது Manipulate செய்யப்பட்டுள்ளது. (தற்போது சாட்சி அந்த ஆவணத்தை முழுவதுமாக பார்த்துவிட்டு அதிலுள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை என்று கூறுகிறார் ). இதற்கு முன்பு இதே ஆவணத்தை நீதிமன்றத்தில் காண்பிக்கும்போது என் கையெழுத்தை ஒத்துக்கொண்டுள்ளேன் என்றால் அது தவறு . ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்யும் போது தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ரசீதில் பக்கங்களிலுள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும் ஆனால் கையெழுத்துக்கு மேல் குறிபிட்டுள்ள விவரங்கள் சரியானவை இல்லை என்று சாட்சியம் அளித்துவிட்டு தற்போது முன்னுக்கு , பின் முரணாக சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு.

(3) நான் ஒரே ஒரு ரசீதை தான் கவுஸ்பாஷாக்கு எழுதிக்கொடுத்தேன் . செக்கை வாங்கிக்கொண்டு ரசீதை எழுதிக்கொடுத்தேன் . அந்த ரசீது எல்லாம் டைப் செய்யப்பட்டு அதில் தான் நான் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் செக் நம்பர் மட்டும் கையால் எழுதப்பட்டியிருந்தது அதில் நான் கையெழுத்து போட்டேன் . பவர் எழுதிக்கொடுத்து , பணம் வாங்கிக்கொண்டதற்கான ரசீதின் அசல் உள்ளது என்றும் நான் ஜெராக்ஸ் ரசீதை Manipulate செய்து இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றும் பவர் எழுதிக்கொடுக்கும் போது 1ம் பிரதிவாதி எனக்கு செக் ஏதும் கொடுக்கவில்லை என்றும் செக் கொடுத்ததாக பொய்யாக குறிப்பிட்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது தவறு. நான் இதற்கு

முன்பு சாட்சியம் அளிக்கும்போது மேற்கண்ட நான் எழுதிக்கொடுத்த ரசீதை நான் மொபைலில் போட்டோ எடுத்ததாக குறிபிட்டுள்ளேன் என்றும் அதை பார்த்தால் சொல்லிவிடலாம் என்று சொல்லியுள்ளேன் என்றும் , அந்த மொபைல் போனையும் அந்த போட்டோவையும் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்று சொன்னால் அந்த மொபைல் போனில் இருந்து அந்த போட்டோ Delete ஆகிவிட்டது.

(4) Storage இல்லாததால் Delete ஆகிவிட்டது. அந்த மொபைல் போனை நீதிமன்றத்தில் ஒப்படைத்தால் உண்மை தெரிந்துவிடும் என்ற காரணத்திற்காக சென்ற வாய்தாவில் மொபைல் போனில் எடுத்த போட்டோவை பார்த்தால் சொல்லிவிடலாம் என்று சொல்லிவிட்டு தற்போது அந்த போட்டோ மொபைலில் Delete ஆகிவிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு. Storage இல்லாமல் Delete ஆகிவிட்டதாக சொல்லும் விவரங்கள் பொய் என்றும் ஒரு நபர் Delete செய்தால் மட்டும் தான் அந்த எடுக்கப்பட்ட போட்டோ Delete ஆகும் என்று சொன்னால் அது சரியல்ல. உண்மையான ரசீதில் ரூ .2,40,00,000/− ரொக்கமாக வாங்கிக்கொண்டு ரசீது எழுதிக்கொடுப்பதாக தெரிவித்து ரசீது எழுதிக்கொடுத்துவிட்டு போர்ஜரியாக ஒரு ரசீதை தயார் செய்து நான் ஒரு வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அக்கீரமாக இலாபம் அடையப்பார்கிறேன் என்றால் அது தவறு . மேற்படி ரசீதில் நான் முழு தொகையும் பெற்றுக்கொண்டேன் என்றும் , கொடுக்கவேண்டிய மீதி தொகை ஏதுமில்லை என்றும் தெரிவித்து அந்த ரசீது என்னால் கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றால் அது தவறு. அந்த ரசீதில் சொரக்காயல்பள்ளி

சேர்ந்த நபரும், குருபரப்பள்ளியை சேர்ந்த நபரும் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது . நான் எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தில் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்று சொன்னால் சாட்சி Ex.A.2 ஆவணத்தை பார்த்துவிட்டு தனக்கு தமிழ் தெரியாது என்று கூறுகிறார் மேலும் ஆங்கிலத்திலுள்ள சாட்சிகளின் விவரங்கள் யாரால் கையெழுத்து போடப்பட்டது என்று கேட்டால் அந்த விவரம் தனக்கு தெரியாது என்று கூறுகிறார்.

(5) மேற்படி பவர் ஆப் அட்டர்னியில் கையெழுத்து போட்ட அந்த இரண்டு நபர்கள் தான் அந்த ரசீதிலும் கையெழுத்து போட்டார்கள் என்று சொன்னால் இந்த இரண்டு ஆட்களும் கவுஸ்பாஷா கொண்டு வந்த நபர்கள் ஆவார்கள். என் தரப்பில் எந்த சாட்சியையும் அழைத்துச்செல்லவில்லையா என்று சொன்னால் அழைத்துச்செல்லவில்லை . வழக்கு தாக்கல் செய்யப்பட்ட செக்கானது எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் ஏற்கனவே இருந்த சொத்து சம்மந்தமான கொடுக்கல் வாங்களுக்காக என்னிடம் கொடுக்கப்பட்ட செக் என்றும் அதை மோசடியாக பயன்படுத்தி ஒரு மோசடியான ரசீதை தயார் செய்து ஒரு தவறான வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது தவறு . நான் சொல்லுவது போல் கவுஸ்பாஷா எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்திற்காக எந்த ஒரு செக்கும் கொடுக்கவில்லை என்றும் முழு தொகையையும் ரொக்கமாக கொடுத்தார் என்றும் அதனால் வழக்கில் நான் குறிப்பிட்டுள்ளப்படி 1ம் பிரதிவாதி எந்த பணத்தை எனக்கு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் அது தவறு . 1ம் பிரதிவாதிக்கு நான் சொத்தை குறித்து பவர் எழுதிக்கொடுத்துவிட்டு அந்த

கிரய தொகைக்காக செக் கொடுத்து அந்த செக் பணம் ஆகாததால் பணத்தை திருப்பி கொடுக்கும்படி வழக்கில் பரிகாரம் கோரியுள்ள பட்சத்தில் பவரை அனுசரித்து 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ள கிரயப்பத்திரத்தையும் செல்லுப்படி ஆகாது என்று நான் கோரியுள்ளேன் என்று சொன்னால் Alternative –ஆக அதை கோரியுள்ளேன். இந்த வழக்கில் வழக்குரையுடன் ஒரு ஜெராக்ஸ் ரசீதையும் தாக்கல் செய்துள்ளேன் என்றும் தற்போது காண்பிக்கப்படுவது என்னால் தாக்கல் செய்யப்பட்ட ஜெராக்ஸ் ரசீது என்று சொன்னால் சரிதான் அது **EX.C.1 .**

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN